Notice is hereby given to the public in general under the Insolvency and Bankruptcy Code 2016 and Regulations there under, that the Process for Sale of Assets and Properties owned by **Shree Hanuman Texfab Private Limited - In Liquidation (Corporate Debtor)** forming part of Liquidation Estate formed by the Liquidator, appointed by the Hon'ble National Company Law Tribunal, Mumbai Bench, Maharashtra, vide order dated 05th August, 2021. The E-Auction will be done by the undersigned by E-Auction through the Service Provider National e-Governance Services Ltd via website https://nbid.nesl.co.in/

| Asset | BLOCK | Reserve Price (INR in Crores.) | EMD Amount (INR in lac) | Incremental Value (INR in lac) |
|---|---|---|---|---|
| Industrial Land admeasuring ~24,189 sqmt bearing Survey No. 93/2/1(pt), 93/2/1, 93/1/2(pt), 93/4/1, 93/5/1, 93/4/2 of Village Gandhre, Opposite Sneh Garden Hotel, Next to MSEB Receiving Station, Bhiwandi Wada Road, Taluka Wada, District Palghar- 421303.<br><br>The buildings with Built Up Area admeasuring ~10,984 Sqmt. include, Main plant building RCC framed structure, commercial and staff room building, Structure attached to Main factory Building, Plant Extension Shed, Security Cabin, Electric Cabin, Labour Quarter, Canteen, RCC Overhead Tank, Wash room structure, etc. | A | 9.00 Crores (Nine Crores Only) | 90.00 Lac (Ninety Lac Only) | 5 Lakh (Five lac Only) |

| | |
|---|---|
| Date and Time of Auction | 05 September 2022 from 10:30 a.m to 12:00 p.m |
| Last Date of Submission of EOI and EMD | 02nd September 2022 before 11:00 P.M. |
| Inspection Date and Time | On or Before 02nd September 2022 from 11:00 a.m to 3:00 p.m |

Interested Applicants may refer to the Complete E-Auction Process Document containing details of terms and conditions of the E-Auction on the website www.shreehanumantexfab.co.in. The Liquidator has right to cancel or extend or modify etc any of the terms of E-Auction at any time. The Liquidator has the right to reject any bid without assigning any reasons.

**PART B**
**EXPRESSION OF INTEREST FOR ASSIGNMENT OF NOT READILY REALIZABLE ASSETS ("NRRA") OF SHREE HANUMAN TEXFAB PRIVATE LIMITED**

Pursuant to IBBI (Liquidation Process) regulation, (Regulation -37A), the Liquidator may assign or transfer NRRA. NRRA means any assets included in the Liquidation Estate which could not be sold through available options and includes unrealized debtors, contingent or disputed assets and assets underlying proceedings referred to in Section 43 to 51 and Section 66 of the Code. The Liquidator is hereby inviting the interested person(s) to whom the liquidator may assign or transfer the Not Readily Realizable Assets ('NRRA") of the Corporate Debtor. The Terms and Conditions of the agreement for assignment/ transfer of assets – unrealized book debts, other current assets & underlying proceedings of application filed under Section 66 shall be finalized after consultation with the stakeholders consultation committee and is subject to the approval of Adjudicating Authority. Interested person(s) may write at liqshreehanumantexfab@gmail.com for detailed terms and conditions of the Expression of Interest on or before 9th September 2022. Last date for submitting response to this expression of interest is Monday 12th September 2022

**sd/-**
**Ganesh Venkata Siva Rama Krishna Remani**
Liquidator - Shree Hanuman Texfab Private Limited
IBBI Regn. No.: IBBI/IPA-001/IP-P01386/2018-19/12176
Communication Address: 302 Nahar Business Center, Chandivali, Mumbai - 400072
Email ID: liqshreehanumantexfab@gmail.com
Contact No.-+91 99675 00010

Date : 19th August 2022
Place: Mumbai

# அரும்பாக்கம் கொள்ளை வழக்கில் உடனடி நடவடிக்கை: தனிப்படை போலீசாருக்கு டி.ஜி.பி. சைலேந்திரபாபு பாராட்டு



சென்னை, ஆக. 23–

அரும்பாக்கம் கொள்ளை வழக்கில் உடனடி நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளை கைது செய்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை மீட்ட தனிப்படை போலீசாரை டி.ஜி.பி. சைலேந்திரபாபு பாராட்டினார்.

அரும்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ரசாக் கார்டன் சாலையில் இயங்கி வரும் பெடரல் வங்கி (வங்கி அல்லாத நிதி நிறுவனம்) நிதிச் சேவைகள் மையத்தில் கூட்டுக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது. மேற்கண்ட வங்கியின் கிளை மேலாளர் கே சுரேஷ் அளித்த புகாரின் பேரில் கே8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொண்டதில் வங்கி அலுவலகத்தில் அலுவலில் இருந்த வங்கி ஊழியர்களை கத்தியை காட்டி மிரட்டி வங்கி ஊழியரிடம் இருந்த சாவியை பறித்து கொண்டு வங்கி ஊழியர்களை ஒய்வு அறையில் அடைத்து விட்டு வங்கியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களின் சுமார் ரூ.15 கோடி மதிப்பிலான 31.7 கிலோ எடை கொண்ட தங்க நகை ஆபரணங்களை கொள்ளையடித்துக் கொண்டு, வங்கி ஊழியர்களில் இருவரை வைத்து பூட்டி விட்டு அதன் சாவியுடன் கொள்ளயர்கள் தப்பி சென்றுள்ளது தெரியவந்தது.

இந்த வழக்கில் கூடுதல் போலீஸ் கமிஷனர் அன்பு தலைமையிலான தனிப்படை போலீசார் சிறப்பாக புலன் விசாரணை நடத்தி குற்றவாளிகள் 7 பேரையும் விரைந்து கைது செய்தனர். கொள்ளையடிக்கப்பட்ட நகைகளையும் பத்திரமாக மீட்டனர்.

இந்த நிலையில் கூடுதல் கமிஷனர் அன்பு மற்றும் அவருடைய தனிப்படையில் இடம் பெற்ற இணை கமிஷனர் ராஜேஸ்வரி, துணை கமிஷனர்கள் விஜயகுமார் (அண்ணா நகர்), ராஜாராம் (கொளத்தூர்), குமார் (கோயம்பேடு), உதவி கமிஷனர்கள் அருள்சந்தோஷமுத்து (அரும்பாக்கம்), ரவிச்சந்திரன் (அண்ணாநகர்), போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் பரணிதரன் (அரும்பாக்கம் குற்றப்பிரிவு), பிரபு (சட்டம்ஒழுங்கு), கோபாலகுரு (அண்ணாநகர் சட்டம் ஒழுங்கு), பூபாலன் (சூளைமேடு சட்டம் ஒழுங்கு), அரும்பாக்கம் சப் இன்ஸ்பெக்டர்கள் நிர்மல்ராஜ், பன்னீர்செல்வம், அண்ணாநகர் சப் இன்ஸ்பெக்டர் பெனாசீர் பேகம், போலீஸ்காரர்கள் குழந்தைவேல், பிரித்விராஜ், சாலமோன்ராஜ், முகமது சலாவுதீன், மணிகண்ட ஐயப்பன் ஆகியோரை நேற்று நேரில் வரவழைத்து போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு, பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டினார். சென்னை போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் உடனிருந்தார்.

## தமிழகத்தில் நேற்று கொரோனா பாதிப்பு 600க்கும் கீழ் வந்தது

சென்னை, ஆக.23

தமிழகம் முழுவதும் நேற்று 21 ஆயிரத்து 169 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 351 ஆண்கள், 240 பெண்கள் என 591 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக சென்னையில் 88 பேர், கோவையில் 72 பேர் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. இதில் 21 மாவட்டங்களில் 10 க்கும் குறைவானோர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 12 வயதுக்கு உட்பட்ட 52 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட 89 முதியவர்களும் அடங்குவர்.

தமிழகத்தில் 65 நாட்களுக்கு பிறகு கொரோனா பாதிப்பு 600க்கும் கீழ் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் நேற்று கொரோனா தொற்றால் எந்த மாவட்டத்திலும் உயிரிழப்பு இல்லை. மேலும் நேற்றைய நிலவரப்படி 5 ஆயிரத்து 842 பேர் கொரோனா நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். அதிகபட்சமாக சென்னையில் 2 ஆயிரத்து 338 பேரும், கோவையில் 584 பேரும், செங்கல்பட்டில் 362 பேரும் சிகிச்சையில் உள்ளனர். 696 பேர் கொரோனா நோயில் இருந்து குணமடைந்து நேற்று ‘டிஸ்சார்ஜ்’ செய்யப்பட்டுள்ளனர்.

# மாநில கல்விக் கொள்கை: மக்கள் கருத்து தெரிவிக்க அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஆக.23

அடுத்த மாதம் 20–ந்தேதி முதல் மாவட்டம் தோறும் மாநில கல்விக்கொள்கை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுகிறது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் தனித்துவமான மாநில கல்வி கொள்கையை உருவாக்க ஓய்வு பெற்ற ஐகோர்ட் தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில கல்வி கொள்கை சம்பந்தமாக பொதுமக்கள், கல்வியாளர்கள், தன்னார்வலர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் அடுத்த மாதம் (செப்டம்பர்) 15ந்தேதி வரை கருத்துருக்கள் மற்றும் ஆலோசனைகளை stateeducationpolicy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அல்லது சென்டர் பார் எக்செல்லன்ஸ் கட்டிடம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–600025 என்ற அலுவலக முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த கால அவகாசம் மேலும் ஒரு மாதம் அதாவது அக்டோபர் 15ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பல்வேறு இடங்களில் கருத்து கேட்பு கூட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் செப்டம்பர் 20ந்தேதியும்,

மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்ட மக்கள் மதுரை கலெக்டர் அலுவலக வளாகத்தில் செப்டம்பர் 21ந்தேதியும்,

திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்ட மக்கள் திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்திலும், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர் மாவட்ட மக்கள் திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்திலும் அக்டோபர் 3வது வாரம் கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது. கருத்து கேட்பு கூட்டம் மேற்படி மாவட்டங்களில் குறிப்பிட்ட தேதியில் காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

இதர மாவட்டங்களிலும் படிப்படியாக கருத்து கேட்பு கூட்டம் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


### கே.சி.பி. சுகர் அண்டு இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

KCP SUGAR AND IND COR

பதிவு அலுவலகம்: 'இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்', எண். 239, அண்ணா சாலை, சென்னை - 600006

CIN: L15421TN1995PLC033198

Tel: 044 - 28555171 - 176 | Fax: 044 - 28546617

e-mail: secretarial@kcpsugar.com | Website: www.kcpsugar.com

**பொது அறிவிப்பு**

நிறுவனத்தின் 27–வது ஆண்டு பொதுக்கூட்டம் புதன்கிழமை, செப்டம்பர் 28, 2022 (28.09.2022) அன்று காலை 10:00 மணிக்கு காணொளிக் காட்சி மூலம் நடைபெறும். இது தொடர்பாக MCA மற்றும் SEBI வெளியிட்ட அறிவிப்புகளுக்கு இணங்க நடைபெறும்.

அனைத்து பங்குதாரர்களும் காணொளிக்காட்சி மூலம் மட்டுமே நிறுவனத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். மேலும் மின்னணு முறையிலேயே வாக்களிக்க முடியும். அதற்கான உள் நுழைவு ID மற்றும் கடவுச்சொல் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும்.

பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு மட்டுமே அனுப்பப்படும்.

ஆகையால், மின்னஞ்சல் மூலம் ஆவணங்களை பெறுவதற்கு பங்குதாரர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு / புதுப்பிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பங்குகளை மின்னணு வடிவில் வைத்திருப்பவர்கள், அவர்களது Depository Participant-இடமும், பங்குகளை Physical-ஆக வைத்திருப்பவர்கள், நிறுவனத்தின் பங்கு பரிமாற்ற முகவர் மற்றும் நிறுவனத்தின் பதிவாளரான M/s.இண்டக்ரேடட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட்-இடமும் (2வது தளம், கென்சஸ் டவர்ஸ், எண் 1, இராமகிருஷ்ணா தெரு, தி.நகர், சென்னை - 600017. தொலைபேசி எண்: 044 - 28140801 - 803 மின்னஞ்சல்: corpserv@integratedindia.in) தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு / புதுப்பித்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பாக எந்த தகவலும் கிடைக்க பெறாத பங்குதாரர்கள், நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட பங்கு பரிமாற்ற முகவர் மற்றும் நிறுவனத்தின் பதிவாளரையோ அல்லது நிறுவனத்தின் செயலாளரையோ (secretarial@kcpsugar.com; தொலைபேசி: 044 - 28555171 - 176) தொடர்புக் கொள்ளலாம்.

பங்குதாரர்கள் [illegible] மின்னணு பரிமாற்றம் மூலம் தங்களது வங்கி கணக்கில் நேரடியாக பெறுவதற்கு தங்களது வங்கி கணக்கு தகவல்களை மேற்குறிப்பிட்ட பங்கு பரிமாற்ற முகவர் மற்றும் நிறுவனத்தின் பதிவாளரிடமோ அல்லது Depository Participant-இடமோ பதிவு / புதுப்பித்துக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறுவதற்கும் [illegible] cut-off date | 21/09/2022 |
| பங்கு பரிமாற்றம் நிறுத்தப்படும் நாட்கள் | 22/09/2022 to 28/09/2022 |
| தொலைதூர மின்னணு முறை வாக்களிக்கும் காலம் | 25/09/2022 (காலை 9 மணி முதல்) 27/09/2022 (மாலை 5 மணி வரை) |
| ஆண்டு பொதுக்கூட்டத்தின் அன்று மின்னணு மூலம் வாக்களிக்கும் நேரம் | 28/09/2022 (ஆண்டு பொதுக்கூட்டம் முடியும் வரை) |

ஆண்டு அறிக்கை நிறுவனத்தின் இணையதளமான www.kcpsugar.com மற்றும் பங்குச்சந்தைகள் இணையதளமான www.bseindia.com / www.nseindia.com -இல் கிடைக்கப் பெறும்.

கே.சி.பி. சுகர் அண்டு இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்காக

இடம் : சென்னை    Sd/-

தேதி: 23.08.2022    நிறுவன செயலாளர்


# ஊழியர்களுக்கான தொழில் வரியை தாமதமின்றி செலுத்த வேண்டும்: தொழில் நிறுவனங்களுக்கு சென்னை மாநகராட்சி வலியுறுத்தல்

சென்னை, ஆக.23

ஊழியர்களுக்கான தொழில் வரியை தாமதமின்றி செலுத்த வேண்டும் என்று தொழில் நிறுவனங்களுக்கு மாநகராட்சி வலியுறுத்தி உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மத்திய, மாநில, பிற அரசுத்துறை சார்ந்த அதிகாரி, பணியாளர், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், தொழில் புரிவோர், வணிகர்கள் ஆகியோரிடமிருந்து 6 மாதத்துக்கு ஒருமுறை தொழில் வரி வசூலிக்கப்படுகிறது. 2022–23ம் நிதி ஆண்டுக்கான முதலாம் அரையாண்டு தொழில் வரியை சம்பந்தப்பட்ட வருவாய் அதிகாரி பெயரில் காசோலைகள் அல்லது வரைவோலைகள் மூலமாக மாநகராட்சி உரிம ஆய்வாளர்களிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம். மேலும் மின்னணு சேவை வழியாகவும் வரி செலுத்தலாம்.

www.chennaicorporation.gov.in என்ற மாநகராட்சி இணையதளம் மூலமாக எந்தவித பரிமாற்ற கட்டணமில்லாமல் தொழில்வரி செலுத்தலாம். மண்டலங்கள் மற்றும் வார்டு அலுவலகங்களில் அமைந்துள்ள இ–சேவை மையங்களிலும் தொழில்வரியை செலுத்தலாம். எனவே, தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் உரிமையாளர்கள் தங்களிடம் பணிபுரிபவர்களின் சம்பளத்தில் ஆகஸ்டு மாதம் தொழில் வரியினை பிடித்தம் செய்து, செப்டம்பர் மாதம் இறுதிக்குள் அதற்குண்டான விவரங்களுடன் தாக்கல் செய்து தொழில் வரியை செலுத்திடவேண்டும். தவறும் பட்சத்தில் அபராதம் கணக்கீடு செய்து வசூலிக்கப்படும். மேலும் மாநகராட்சியின் அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்குகள், குப்பைகளை அகற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனே செலுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கண்ட தகவல் பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


### பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு. செல்வின், த/பெ. வில்சன் நாடார், வீட்டு எண்.4/70, சர்ச் தெரு, சென்னீர் குப்பம், சென்னை – 600056, என்ற விலாசத்தில் வசித்து வருவதாகவும், கடந்த 17.08.2022 காலை 10 மணி அளவில் தன் வீட்டில் இருந்து தடம் எண்.66, அரசு பேருந்தில் பூந்தமல்லியில் இருந்து இரட்டை பிள்ளையார் கோயில் பஸ் நிறுத்தம், பம்மல், சென்னை –600075ல் வரும்போது தன் கைப்பையில் வைத்திருந்த தனது அசல் வீட்டு பத்திரம் சர்வே எண்.1050 பூந்தமல்லி கிராமம் காணாமல் போய் விட்டதாகவும், இதுகுறித்து பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை எனவும் தான் தனது இடத்தை விற்பனை செய்ய மேற்குறிப்பிட்ட அசல் பத்திரம் தேவைப்படுவதால் அப்பத்திரம் யாருக்காவது கிடைக்கப் பெற்றால் மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

C.V. இளங்கோவன், B.A., B.L.,
C.I. பூவேந்தன், B.Com, B.L.,
P. பிரமிளா, B.Com, B.L.,
S. கணேஷ்,B.A., B.L.,
வழக்கறிஞர்கள்,
எண்.5/14, V.V. கோயில் தெரு, சானடோரியம், சென்னை –600047
கைபேசி எண்.9840130429

### பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர், சென்னை –600 014, ராயப்பேட்டை சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு கதவிலக்கம் 87/34ல் வசிக்கும் காலஞ்சென்ற திருமதி சசிகலா அவர்களுக்காக நான் தெரிவிப்பது என்னவென்றால்:

09.08.2022 அன்று காலை 11 மணிஅளவில் எனது கட்சிக்காரர் மணிமங்கலத்தில் ஒரு நிலத் தரகரை சந்தித்து விட்டு அருகில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்தி விட்டு திரும்பும்போது கீழ்காணும் ஆவணங்களை தவற விட்டு விட்டார்.

(1) திருவள்ளூர் சார் பதிவகத்தில் 11.3.1974ல் பதிவு செய்யப்பட்ட விற்கிரய ஆவண எண்.833/1974 (2)திருவள்ளூர் சார் பதிவத்தில் 28.06.1985–ல் பதிவு செய்யப்பட்ட விற்கிரய ஆவண எண். 1782/1985 (3) திருவள்ளூர் சார் பதிவத்தில் 23.11.2012ல் பதிவு செய்யப்பட்ட விற்கிரய ஆவண எண். 14783/2012 (4) கூடுவாஞ்சேரி சார் பதிவகத்தில் 20.11.1986ல் பதிவு செய்யப்பட்ட விற்கிரய ஆவண என். 1043/1986 (5) கூடுவாஞ்சேரி சார் பதிவகத்தில் 16.6.1987ல் பதிவு செய்யப்பட்ட விற்கிரய ஆவண எண், 1644/1987 (6) கூடுவாஞ்சேரி சார் பதிவகத்தில் 10.12.1990ல் பதிவு செய்யப்பட்ட விற்கிரய ஆவண எண். 3794/1990. (7) புல எண். 293/1 மற்றும் 293/2 உள்ள சொத்துக்களுக்கு திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலக பட்டா எண். 1802 (8) புல எண். 293/1 மற்றும் 293/2 உள்ள சொத்துக்களுக்கு தண்ணீர்குளம் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா மற்றும் அடங்கல்

இந்த ஆவணங்கள் யாரிடமாவது கிடைக்கும் பட்சத்தில் அதனை மேற்கூறிய விலாசத்தில் உள்ள எனக்கோ அல்லது மேற்படி ஆவணங்களின் உரிமையாளரான மேலே கண்ட விலாசத்தில் வசிக்கும் திருமதி சசிகலா அவர்களிடமோ ஒப்படைக்குமாறு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.ரவிச்சந்திரன்,
வழக்கறிஞர்,
எண்.15, ரூபி அபார்ட்மெண்ட்ஸ்,
தாமஸ் தெரு, கடப்பேரி, சென்னை. 600 045

### BEFORE THE DEBTS RECOVERY APPELLATE TRIBUNAL - CHENNAI
**(7th Floor, Shasthiri bhavan, Haddows Road, Nungambakkam, Chennai600 006)**
**R.A.(SA) NO OF 28/2020**
**IN**
**SA. NO. 153 OF 2018**

The Authorised Officer
Kotak Mahindra Bank
1st Floor, CEEBROS Centre
39, Montieth Road, Egmore, Chennai-600 008 .... Appellant

-VS-

1. M/s. Madha Agencies
2. Mrs. R. Roselin Raja
3. Mr. Moses Rajan,
4. The District Magistrate, .... defendants

**SUMMONS TO DEFENDANTS THROUGH SUBSTITUTED SERVICE**

Whereas the above named applicant has filed the SARFAESI APPLICATION (APPEAL) R.A(SA)28/2020 in this Hon'ble Appellate Tribunal-, Chennai, for recovery of a sum of Rs.4,43,37,254/- (Rupees Four Crore Fourty Three Lakhs Thirty Seven Thousand Two Hundred and Fifty Four Only) 22.08.2022 from the defendant challenging the actions of the bank.

Whereas the service of summons / notice could not be effected in the ordinary manner and whereas substituted services has been ordered by this Hon'ble Tribunal, and hence this notice through paper publication. You are therefore directed to appear before this Hon'ble Appellate Tribunal (7th Floor, Shasthiri bhavan, Haddows Road, Nungambakkam, Chennai-600 006.) in person or through a duly instructed Advocate and file written statement on or before 26.08.2022 at 11.00 a.m and show cause as to why reliefs prayed for should not be granted.

Take notice that in case of default, the sarfaesi application R.A(SA)28/2020 shall be heard by this Hon'ble Appellate Tribunal and decided in your absence, in accordance to law.

M. AJMAL AZZATH
Counsel for Applicant

**நடுவர் – மத்திய சென்னை மாவட்ட சீட்டு நிதி வழக்குகள் நீதிமன்றம்.**
**ஒருங்கிணைந்த வணிக வரி மற்றும் பதிவுத் துறை அலுவலக கட்டிடம், தரைதளம், கால்நடை மருத்துவமனை வளாகம், அண்ணா சாலை, நந்தனம், சென்னை– 600 035.**

**நடுவர்**
**வழக்கு எண்.213 /2022**

ஸ்ரீ கோகுலம் சிட்ஸ் அண்டு பைனான்ஸ் கம்பெனி (பி) லிமிடெட், நெ.49, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600 024. ..Disputant

எதிர்

PRABHU.S & Another ...Respondent/Opponents

To,
P.Devi, (2nd Opponent) (Doc Holder)
W/o. S. Prabhu,
No.317/31, Saravanakudil Street,
Pommaiyagoundanpatti, Theni District: 625 531. ...Opponents

**சொத்து விபரம் ஆவண எண்.2631/2018 (P.Devi)**

தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சப்டி, ஊஞ்சாம்பட்டி கிராமம், பொட்டல்காட்டுப்புலத்தில் பழைய பட்டா எண்.1251–க்கு பின் கூட்டுப் பட்டா எண்.1413–ல் கண்ட புன்செய் அயன் சர்வே எண்.912/4 ஏக்கர், 06 செண்ட்டில் கீழ்பக்கம் 2 ஏக்கர், 03 செண்ட்டில் கீழ்பக்கம் 1 ஏக்கர், 02 செண்ட் 02–ல் கிழக்கு பக்கம் 46 செண்ட் உள்ள புன் செய் நிலம் தற்போது சப்டி விஷன்படி பட்டா எண்.5291–ல் கண்ட புன் செய் அயன் சர்வே எண்.912/4C2B–ல் 0.18.5 ஏர்ஸாக உள்ள நிலத்திற்கு நான்கு மால்.

வடக்கு – கிழமேல் ரோடு
கிழக்கு – ராஜா சங்கர் வகையறா நிலம்
தெற்கு – காமராஜ் வகையறா நிலம்
மேற்கு – வீரபத்திரன் வகையறா நிலமும்,
முருகன் கைவசமுள்ள நிலமும்

இம்மாலில் மேற்படி செண்ட் 46–க்கு 0.18.50 ஏர்ஸ் புன்செய் நிலம்.

வாதி சீட்டு நிறுவனத்திற்கு தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவை பாக்கி வட்டியுடன் ரூ.75,84,400/– தொகையை திரும்பப் பெற இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த தாவா 15.09.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடுவர் –மத்திய சென்னை மாவட்ட சீட்டு நிதி வழக்குகள் நீதிமன்றம். ஒருங்கிணைந்த வணிக வரி மற்றும் பதிவு துறை அலுவலக கட்டிடம் தரைதளம், கால்நடை அண்ணா சாலை, நந்தனம், சென்னை– 600 035. முன்பு இறுதியாக விசாரணைக்கு அழைக்கப்படவிருக்கிறது. அன்று நேரில் ஆஜராகத் தவறினால் இந்த தாவா உங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக முடிவு செய்யப்படும்.

ஜி.இராமசந்திரன்
வாதியின் வழக்கறிஞர்.

### நியோஜின் பின்டெக் லிமிடெட்

(L65910TN1988PLC131102)

பதிவு அலுவலகம் : MIG 944, தரை தளம், டிஎன்எச்பி காலனி, 1வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600 042

கார்ப்பரேட் அலுவலகம் : 311/312, 3வது மாடி, நீல்கந்த் கார்ப்பரேட் ஐடி பார்க், கிரோல் சாலை, வித்யாவிகார் (மே), மும்பை 400 086.

Tel No: +91 22 62514646 | Website: www.niyogin.com | E-mail id: info@niyogin.in

**34வது வருடாந்திர பொதுக்கூட்டம், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு**

[illegible]

கட்ஆப் தேதியான செப்டம்பர் 07, 2022ன்படி, காகித வடிவத்தில் அல்லது மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதன் மூலம் மின்னணு முறையில் வாக்களிக்க உரிமை உண்டு. வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்பு தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை. இருப்பினும், தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு வசதி கிடைக்கும். ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்த உறுப்பினர், அதை மீண்டும் மாற்றி வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். தொலைதூர மின்னணு வாக்களிப்பு விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| a | மின்னணு வாக்குப்பதிவு நிகழ்ச்சி எண். (EVEN) | 120901 |
| b | வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பும் பணி நிறைவுத் தேதி | திங்கட்கிழமை, ஆகஸ்ட் 22, 2022 |
| c | வருடாந்திர அறிக்கையை பெற தகுதி உள்ள நபர்களை தீர்மானிக்கும் கட் ஆப் தேதி | வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 12, 2022 |
| d | தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதன் மூலம் வாக்களிப்பதற்கான உறுப்பினர்களின் தகுதியை தீர்மானிப்பதற்கான கட்ஆஃப் தேதி | புதன்கிழமை, செப்டம்பர் 07, 2022 |
| e | மின்னணு முறையில் வாக்களிப்பு துவங்கும் நாள் மற்றும் நேரம் | ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 11, 2022 அன்று காலை 9.00 மணி |
| f | மின்னணு முறையில் வாக்களிக்க கடைசி நாள் மற்றும் நேரம் | செவ்வாய்கிழமை, செப்டம்பர் 13, 2022 அன்று மாலை 5.00 மணி |

அதன்பிறகு என்எஸ்டிஎல் மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்கான மின்னணு வாக்குப்பதிவு தொகுதி முடக்கப்படும்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் தனிநபர் அல்லாத பங்குதாரர்கள், மின்னஞ்சல் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளை வாங்கி கம்பெனியின் உறுப்பினராகும் நபர்கள் மற்றும் கட்ஆப் தேதி அதாவது செப்டம்பர் 07, 2022 அன்று பங்குகளை வைத்திருக்கும் நபர்கள் evoting@nsdl.co.inக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டைப் பெறலாம். இருப்பினும், நீங்கள் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்காக என்எஸ்டிஎல்-ல் பதிவு செய்திருந்தால், நீங்கள் வாக்களிக்க உங்கள் தற்போதைய யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டைப் பயன்படுத்தலாம். உங்கள் பாஸ்வேர்டை மறந்துவிட்டால், www.evoting.nsdl.com இல் கிடைக்கும் "பயனர் விவரங்கள்/பாஸ்வேர்ட் மறந்துவிட்டது" அல்லது "பிசிகல் யூசர் ரீசெட் பாஸ்வேர்ட்" விருப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் கடவுச்சொல்லை மீட்டமைக்கலாம் அல்லது 1800 1020 9990/1800 22 44 30 என்ற கட்டணமில்லா எண்ணை அழைக்கவும்.

மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் தனிநபர் அல்லாத பங்குதாரர்கள், மின்னஞ்சல் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளை வாங்கி [illegible] பின்பற்றலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு/ வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு [illegible] ஏதேனும் கேள்விகள் இருந்தால் www.evoting.nsdl.com இன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் உறுப்பினர்களுக்காக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது 1800 1020 9990/1800 224 430 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது என்எஸ்டிஎல்–ன் திரு. சாகர் எஸ். குததே அவர்களை evoting@nsdl.co.inல் தொடர்பு கொள்ளலாம். வைப்பாளர் மூலம் உள்நுழைவது தொடர்பான தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு மின்னணு முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள் NSDL மற்றும் CDSL–ன் உதவிப் பிரிவை பார்வையிடவும்.

| உள்நுழைவு வகை | உதவி மைய விவரங்கள் |
|---|---|
| NSDL உடன் மின்னணு வடிவில் பத்திரங்களை வைத்துள்ள தனிநபர் பங்குதாரர்கள் | உள்நுழைவில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் evoting@nsdl.co.in–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் NSDL உதவி மையத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது கட்டணமில்லா எண்: 1800 1020 990 அல்லது 1800 2244 30ஐ தொடர்பு கொள்ளவும். |
| CDSL உடன் மின்னணு வடிவில் பத்திரங்களை வைத்துள்ள தனிநபர் பங்குதாரர்கள் | உள்நுழைவில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் helpdesk.evoting@cdslindia.com–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் CDSL உதவி மையத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது தொலைபேசி எண்: 022–23058738 அல்லது 022–23058542–43ஐ தொடர்பு கொள்ளவும். |

தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆராய்வதற்கான ஆய்வாளராக திரு. மிதேஷ் ஜே. ஷா (FCS 10070), மெசர்ஸ் மிதேஷ் ஜெ. ஷா அன்ட் அசோசியேட்ஸ், கம்பெனி செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் சட்டத்தின் பிரிவு 91 மற்றும் கம்பெனிகள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014 விதி 10(1) மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 42ன் கீழ் வருடாந்திர பொதுக் கூட்டத்தையொட்டி உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் வியாழக்கிழமை, செப்டம்பர் 08, 2022 முதல் புதன்கிழமை, செப்டம்பர் 14, 2022 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

நியோஜின் பின்டெக் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
நேகா அகர்வால்
கம்பெனி செயலாளர் & இணக்க அதிகாரி
ACS 41425

தேதி : ஆகஸ்ட் 22, 2022
இடம் : மும்பை

### எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

equitas Equitas Small Finance Bank

CIN: L65191TN1993PLC025280

பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2

தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050

மின் அஞ்சல்: cs@equitasbank.com | www.equitasbank.com

**உறுப்பினர்களுக்கு தபால் வாக்குப் பதிவிற்கான அறிவிப்பு (மின்–வாக்கு முறையில்)**

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 108, 110 மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 (அவ்வப்போது திருத்தப்பட்டது) மற்றும் டிசம்பர் 31, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 39/2020, ஜூன் 23, 2021 பொது சுற்றறிக்கை எண் 10/2021, மே 5, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 3/22 ("MCA சுற்றறிக்கைகள்") மற்றும் மே 13, 2022 தேதியிட்ட செபி சுற்றறிக்கை SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 மற்றும் அவ்வப்போது மாற்றப்படும் சட்டங்கள் மற்றும் விதிகளின் படி, வங்கி தங்களுடைய உறுப்பினர்களின் சம்மதத்தை, “திரு. ரோஹித் கங்காதரராவ் பாட்கே (DIN:07293524) முழு நேர இயக்குனர் அவர்களின் ஊதியம் நிர்ணயிப்பதற்கான” சிறப்புத் தீர்மானத்தை மின்–வாக்கு மூலம் கோருகிறது.

MCA சுற்றறிக்கைகளின் படி வங்கி தபால் வாக்கு அறிவிப்பை மின் அஞ்சல் மூலம் மட்டும் அனுப்பி உள்ளது. உறுப்பினர்களின் சம்மதம் அல்லது மறுப்பும் மின்–வாக்குப் பதிவு மூலமாகவே தெரிவிக்க வேண்டும்.

ஆகஸ்ட் 19, 2022 அன்று, (கட்–ஆப் தேதி) டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலமாக டெபாசிட்டரிகளிடமோ அல்லது வங்கியின் பதிவு மற்றும் பரிமாற்ற முகவர் KFIN Technologies Limited ("RTA") மூலமாகவோ தங்கள் மின் அஞ்சல் முகவரியை பதிவு செய்த வங்கியின் உறுப்பினர்களுக்கு ஆகஸ்ட் 22, 2022 அன்று மின் அஞ்சல் மூலம் தபால் வாக்கு அறிவிப்பு, விளக்கங்கள் & மின்–வாக்கு விதிமுறைகளுடன் அனுப்பி வைத்துள்ளது. கட் ஆப் தேதிக்கு பிறகு பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு இந்த அறிவிப்பு தகவல் மட்டுமே.

வங்கி தனது அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்சியாக National Securities Depository limited (“NSDL”)ஐ, மின்–வாக்கு செலுத்தும் வசதியை வழங்குவதற்கு நியமித்துள்ளது. மேலும், Dr. B. இரவி, தொழில் முறை நிறுவன செயலர், M/s. B. இரவி & அசோஸியேட்ஸ், தொழில் மேற்கொள்ளும் நிறுவன செயலர்கள், மின்–வாக்கு நடைமுறையை நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதைக் கண்காணிக்கும் நெறியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தகுதி உள்ள உறுப்பினர்கள், மின்–வாக்கு வசதியை பயன்படுத்தி, கீழ் குறிப்பிடப்பட்ட காலத்தில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தீர்மானத்திற்கு வாக்கு அளிக்கலாம்.

| மின்–வாக்கு துவங்கும் நேரம் | மின்–வாக்கு முடியும் நேரம் |
|---|---|
| ஆகஸ்ட் 23, 2022 காலை 9.00மணி இந்திய நேரப்படி | செப்டம்பர் 22, 2022 மாலை 5.00மணி இந்திய நேரப்படி |

NSDL நிறுவனம், வாக்கு அளிக்கும் நேரம் முடிந்த பின்னர், மின்–வாக்கு வசதியை நிறுத்திவிடும். அந்த நேரத்திற்குப் பிறகு உறுப்பினர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் வாக்களித்த பின்னர் அதை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மின் அஞ்சல் முகவரி பதிவு செய்யாத உறுப்பினர்கள், மின்–வாக்கு பதிவு செய்ய விரும்பினால் தங்கள் NSDL/CDSL டெபாசிட்டரி பங்கேற்பாளர்களின் டிமேட் கணக்கு லாக்–இன் மூலம் மின்–வாக்கு பதிவு பிரிவைப் பார்த்து கிளிக் செய்து NSDL/CDSL டெபாசிட்டரி அங்கீகாரம் கிடைத்தவுடன், வங்கியின் பெயர் அல்லது மின்–வாக்கு சேவை வழங்குபவரின் பெயர் வந்தவுடன் மின் வாக்குப் பிரிவில் வாக்கு அளிக்க குறிப்பிட்ட காலத்தில் வாக்கு அளிக்கலாம்.

தபால் வாக்கு பதிவு அறிவிப்பு மற்றும் மின்–வாக்கு நடைமுறை ஆகியவற்றை வங்கியின் https://ir.equitasbank.com/shareholder-services/ பகுதியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மின்–வாக்கு பதிவு பற்றி ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் உறுப்பினர்கள் www.evoting.nsdl.com இணையதளத்தில் “அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)” என்கிற பகுதியை வாசிக்கவும், மற்றும் மின்–வாக்கு உபயோகிக்கும் கையேட்டிலிருந்து “பதிவு இறக்கம்” பகுதியை பார்க்கலாம். மேலும் டோல் ஃப்ரீ தொலைபேசி எண்: 1800 1020 990 & 1800 22 44 30 என்ற எண்ணிற்கு அழைக்கலாம் அல்லது evoting@nsdl.co.in என்ற மின் அஞ்சல் முகவரிக்கோ அல்லது உறுப்பினர்கள் கீழ்காணும் முகவரிக்கோ அனுப்பிவைக்கலாம்: நிறுவன செயலர், திரு. N. இராமநாதன், 4வது மாடி, ஸ்பென்சர் பிளாசா, பேஸ் II, 769, மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600002, தொலைபேசி 044–42995000 அல்லது மின் அஞ்சல் cs@equitasbank.com

மின் வாக்கு நடைமுறையின் முடிவுகள் செப்டம்பர் 26, 2022 திங்கட் கிழமை அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அறிவிக்கப்படும். இந்த முடிவுகள் வங்கியின் https://ir.equitasbank.com/shareholder-services/ மற்றும் ஸ்டாக் எக்ஸ்சேஞ்கள் www.nseindia.com & www.bseindia.com இணையதளங்களிலும் வெளியிடப்படும்.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்க்காக

இடம்: சென்னை    N. இராமநாதன்,

தேதி: ஆகஸ்ட் 22, 2022    நிறுவன செயலர்

### சென்னை மீனாட்சி மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: புதிய எண்.70 (பழைய எண்.149), லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004. Tel. No.044-42938938; Fax:044-24993282;E-mail:cmmhospitals@gmail.com, Web:www.cmmh.in; CIN: L85110TN1990PLC019545

**அறிவிப்பு**

[illegible]

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 22, 2022